**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.179/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | இளஞ்சியம் SSI-380 | Prosecution | LW-9 as PW-6 |
| Father Name | க/பெ.கதிரவன் | Defence | |
| Station | திருவெண்காடு | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 56/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**23.02.2026 எதிரிகள் ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் பார்த்திபன் அவர்களின் கையெழுத்தும், கையொப்பமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 22.01.2020ம் தேதி 13.00மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் முருகவேல் நிலைய பொறுப்பில் இருந்த போது சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று திருவெண்காடு காவல்நிலைய குற்ற எண்.19/2020 இ.த.ச பிரிவுகள் 294(b), 342, 326, 506(ii) ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

3. வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததை உதவி ஆய்வாளர் எடுத்துக் கொண்டு கடந்த 22.01.2020 ம் தேதி பகல் 2.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜா மற்றும் செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி **ஆவணங்கள் அ.சாஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியே

விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. வழக்கின் எதிரிகளை தேடிய நிலையில் எதிரிகள் இருவரும் நாங்கூர் பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்தவர்களை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரேவதி அவர்களை விசாரணை செய்துவாக்குமூலம் பெற்று அவரிடமிருந்து காயச்சான்றினை பெற்றுள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 06.02.2021 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 342, 326, 506(ii) கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நிலுவையில் உள்ள வழக்கை முடிக்கவேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கை சரியாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**